இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 20-06-2023

# ஆளுநர் ஆட்டம் அடங்கட்டும்! - 2

குஜராத் மாநில ஆளுநர் கமலா பெனிவாலுக்கும் குஜராத் முதலமைச்சராக இருந்த மோடிக்கும் நேரடி மோதல் நடந்தது. 1986 லோக் ஆயுக்தா சட்டப்படி லோக் ஆயுக்தாவைத் தேர்ந்தெடுக்கும் அதிகாரம் குஜராத் உயர் நீதிமன்றத் தின் தலைமை நீதிபதி மற்றும் ஆளுநரிடம் உள்ளது. அதன்படி ஓய்வு பெற்ற நீதிபதி ஆர்.ஏ.மேத்தாவை 2011-ல் குஜராத்தின் லோக் ஆயுக்தாவுக்கு நியமித்து ஆளுநர் கமலா பெனிவால் ஒப்புதல் அளித்தார். ‘மாநில அரசிடம் ஆலோசிக்கவில்லை’ என்று எதிர்ப்பு தெரிவித்தார் குஜராத் முதல்வர் மோடி. அதற்குப் பழிவாங்கும் வகையில், லோக் ஆயுக்தாவை தேர்ந்தெடுப்பதில் கவர்னர் மற்றும் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியின் பங்கை நீக்கி, முதல்வர் தலைமையிலான தேர்வுக் குழுவுக்கு நியமனம் செய்வதற்கான அனைத்து அதிகாரங்களையும் வழங்க வழி செய்யும் புதிய சட்டத்தைக் குஜராத் சட்டசபையில் நிறைவேற்றினார். அந்த சட்ட மசோதா ஆளுநர் கமலா பெனிவாலுக்கு அனுப்பப்பட்டது. அதனை நிராகரித்து, ‘புதிய சட்டப்படி லோக் ஆயுக்தா அமைப்பது கூண்டில் அடைக்கப்பட்ட கிளி போல இருக்கும்’ என்று 7 பக்க குறிப்புகளுடன் சட்டசபைக்குத் திருப்பி அனுப்பினார் ஆளுநர் கமலா பெனிவால்.

முதல்வர் மோடி சும்மா இருக்கவில்லை. மாநில உரிமையை நிலைநாட்ட அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் அனுப்பினார். ‘மாநில அரசாங்கத்தை ஆலோசிக்காமல் லோக் ஆயுக்தாவை நியமிக்க ஆளுநருக்கு உரிமை இல்லை. கூட்டாட்சிக் கொள்கைகளை மீறும் கவர்னரை திரும்ப அழைக்க வேண்டும். மேத்தாவின் நியமனம் அரசியலமைப்பின் 163வது பிரிவை மீறுகிறது. ஒரு மாநிலத்தின் ஆளுநர் அமைச்சரவையின் ஆலோச னையின்படி செயல்பட வேண்டும்’ என்று கடிதத்தில் மோடி குறிப்பிட்டிருந்தார். (தகவல் : பத்திரிகையாளர் எஸ்.ஏ.எம்.பரக்கத் அலி)

மேத்தா நியமனத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் குஜராத் மோடி அரசு வழக்கு தொடர்ந்தது. மேத்தாவின் நியமனத்தை உறுதி செய்த உச்ச நீதி மன்றம், ‘அமைச்சரவை குழுவின் ஆலோசனையின் பேரில் மட்டுமே ஆளுநர் செயல்பட முடியும்’ என ஆளுநருக்கும் குட்டு வைத்தது. தனக்கு எதிராக ஆளுநர் செயல்படுகிறார் என்று எதிர்த்த, சட்டமன்றத்தில் சட்டமியற்றிய, உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்ட அதே மோடி தான், இன்று ஆளுநர்களை வைத்து எதிர்க்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளுக்கு குடைச்சல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

**அமைச்சரவையில் அமைச்சர்களின் துறையை மாற்றுவது முதலமைச்சரின் அதிகாரம் ஆகும். ஜெயலலிதா முதலமைச்சராக இருக்கும் போதும் இது போல பிரச்சினை எழுந்தது. அ.தி.மு.க. அமைச்சர்கள் செங்கோட்டையன், மதுசூதனன், லாரன்ஸ், இந்திரா குமாரி, ஜெயக்குமார் ஆகியோரின் துறைகளை மாற்றி அமைக்க முடிவு செய்து, அதற்கான கோப்பை ஆளுநர் சென்னா ரெட்டியின் ஒப்புதலுக்காக 1994 நவம்பர் 8-ம் தேதி ஜெயலலிதா அனுப்பி வைத்தார். இந்த துறைகள் மாற்றம் தொடர்பான கோப்புக்கான பதில் நவம்பர் 15-ம் தேதி வரை சென்னா ரெட்டியிடம் இருந்து திரும்பி வரவில்லை. இதனால், கோபம் அடைந்த ஜெயலலிதா அரசு அலுவல் விதியின் கீழ் முதல்வருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி அமைச்சர்களின் துறைகளை நவம்பர் 16-ம் தேதியன்று மாற்றினார். அதுபற்றிய உத்தரவு சென்னா ரெட்டியின் பார்வைக்கு அனுப்பப்பட்டது. அதற்கு நவம்பர் 21-ம் தேதி வேறு வழியில்லாமல் ஒப்புதல் அளித்து கையெழுத்துப் போட்டார் சென்னா ரெட்டி.**

**“அரசு அலுவல் விதிகளில் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில்தான் அமைச்சர் இலாகா மாற்றம் குறித்த உத்தரவைப் பிறப்பித்தேன். இதனை அரசியல் சாசனத்திற்கு விரோதமாகக் கருத முடியாது. பொது நலனுக்கான அமைச்சர்களின் இலாகாக்களை மாற்றுவது அவசியம். அவசரம் காரணமாக அரசு அலுவல் விதிகளைப் பயன்படுத்தி அமைச்சர்கள் இலாகா மாற்றத்திற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதில், நானோ அல்லது அரசோ எடுத்த நடவடிக்கையில் எவ்வித முறைகேடோ சட்டவிரோதமோ இல்லை’** என சொல்லியிருந்தார் ஜெயலலிதா. இதெல்லாம் இன்றைய அடிமை அ.தி.மு.க. கும்பலுக்குத் தெரியாது. அது தெரியாததால்தான் ஆளுநருக்கு மனு கொடுக்கப் போய் கிண்டி மாளிகையில் நொண்டி விளையாட்டு விளையாடி வந்திருக்கிறார்கள் மாண்புமிகுவை இழந்த மாஜிக்கள்.

ஆளுநர் பதவி என்பது நியமனப் பதவி ஆகும். அதுவும், ஆளுநர் ரவி எல்லா மேடைகளிலும் - 1947ஆம் ஆண்டே போய்விட்ட பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக போர் தொடுத்துக் கொண்டு இருக்கிறாரே - அந்த பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் எச்சம் தான் இந்தப் பதவி ஆகும். **“மாநில ஆளுநர் என்பவர் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் ஓர் அதிசயப் படைப்பு. ஆங்கிலேயர் விட்டுச் சென்ற ஏகாதிபத்தியத்தின் கடைசிச் சின்னம். இந்திய நாட்டின் விடுதலைக்குப் பின்னரும் நம்மால் அறுத்தெறிய முடியாத அடிமைப் பந்தம்”** என்று வர்ணித்தார் ‘மலர்க மாநில சுயாட்சி’ என்ற ஆராய்ச்சி நூலைத் தீட்டிய அறிஞர் கு.ச.ஆனந்தன் அவர்கள். ஒன்றிய அமைச்சரவையின் கைத்தடிகள் இவர்கள் என்று அவர்தான் சொன்னார்.

ஜவஹர்லால் நேருவின் சகோதரியான விஜயலட்சுமி பண்டிட் அவர்கள், மராட்டிய மாநில ஆளுநராக இருந்தார். பதவி விலகிய பிறகு அவர் சொன்னார்: “ஆளுநர் பதவியை ஒருவர் ஏற்க தூண்டுகிற முழுமுதல் காரணம், அதில் கிடைக்கும் வசதிகள்தான். ஆளுநர் பதவி பயனற்றது. அதனை அரசியலமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கிவிட வேண்டும். ஆளுநர்களும் ராஜ்பவனங்களும் நியாயமாக எதற்காகச் செயல்பட வேண்டுமோ அதற்காகச் செயல்படவில்லை” என்று சொன்னார். இதனை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது இன்றைய ஆளுநர் ஆர்.என்.ரவியின் செயல்பாடுகள்.

“Shamsher Singh v. State of Punjab” (1975) என்ற வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், “The constitutional conclusion is that the Governor is but a shorthand expression for the State Government and the President is an abbreviation for the Central Government.” என்று சொன்னது. அதனைத் தான் பேரறிவாளன் வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்ற நீதிபதிகளும் உறுதி செய்தார்கள். **மாநில அரசின் சுருக்கெழுத்துதான் ஆளுநர் என்று சுருக்கமாகச் சொன்னார்கள். சுருக்கெழுத்தாளரான ஆளுநர், முதலமைச்சர் சொல்வதைத் தான் எழுத வேண்டுமே தவிர சொந்த எண்ணங்களை செயல்படுத்த நினைக்கக் கூடாது. சொந்தக் கதைகளை அப்பாவி மாணவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு வகுப்பெடுக்கலாம். பாவம் அவர்கள், திருப்பிக் கேள்வி கேட்க மாட்டார்கள்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.6.2023) திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், விளமல் அருகில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஓடம்போக்கி ஆற்றில் உள்ள ஆகாயத் தாமரைகளை அகற்றும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் பூண்டி கே.கலைவாணன், சாக்கோட்டை க.அன்பழகன், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சாருஸ்ரீ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கடலூர் மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்த 4 பேர் குடும்பத்தாருக்கு தலா ரூ. 2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 20-

கடலூர் மாவட்டத்தில் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் தலா ரூ.2 லட்சம் நிதியுதவி அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

கடலூர் மாவட்டம், நெல்லிக்குப்பம் காவல் நிலைய சரகம், மேல்பட்டாம்பாக்கம் கிராமத்தில் இன்று காலை பண்ருட்டியிலிருந்து கடலூருக்குச்சென்ற தனியார் பேருந்தின் வலதுபுற முன் டயர் எதிர்பாராதவிதமாக வெடித்து கடலூரிலிருந்து பண்ருட்டி வந்த தனியார் பஸ் மீது மோதியதால் ஏற்பட்ட விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர், மேலும் பலர் காயமடைந்துள்ளனர் என்ற துயரமானசெய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

இச்சம்பவத்தை கேள்விப்பட்டவுடன் கடலூர் மாவட்ட ஆட்சியரைதொலைபேசியில் தொடர்பு கொண்டு விபத்து நடந்த இடத்திற்கு சென்று தேவையானமீட்பு நடவடிக்கைகளையும், மருத்துவ உதவிகளையும் விரைந்து மேற்கொள்ள கேட்டுக்கொண்டேன்.

மேலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களையும், தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களையும் மருத்துவமனைக்கு நேரில் சென்று விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பனத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடுஉயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும், லேசான காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா இருபத்தைந்தாயிரம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

### கனமழை காரணமாக சென்னைக்கு வந்த

## 10 விமானங்கள் பெங்களூருக்கு திருப்பி விடப்பட்டன!

*சென்னை, ஜூன் 20 -*

*சென்னையில் நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் முதல் நேற்று அதிகாலை வரை பலத்த மழை பெய்தது.*

*சென்னை கடற்கரை பகுதியில் ஏற்பட்ட மேலடுக்கு சுழற்சி காரணமாக இடி மின்னலுடன் விடாமல் மழை பெய்ததால் ரோடுகளில் மழை நீர் தேங்கியது.*

*அதிலும் குறிப்பாக சென்னை மீனம்பாக்கம் பகுதியில் மிக அதிகமாக 14 செ.மீ அளவுக்கு மழை பெய்ததால் விமான நிலைய ஓடுபாதை பகுதியில் தண்ணீர் தேங்கியது.*

*இடைவிடாமல் மழை பெய்ததால் ஓடுபாதை தெரியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டது.*

*இதன் காரணமாக துபாய், அபுதாபி, தோகா, லண்டன், சார்ஜா, சிங்கப்பூர், மஸ்கட், கொழும்பு, உள்ளிட்ட நாடுகளில் இருந்து வந்த 10 விமானங்கள் பெங்களூருக்கு திருப்பி விடப்பட்டன.*

*இதேபோல் சென்னையில் இருந்து துபாய், லண்டன், சார்ஜா உள்ளிட்ட நாடுகளுக்கு புறப்பட வேண்டிய 17 சர்வதேச விமானங்கள் மிக தாமதமாக புறப்பட்டுச் சென்றன.*

*காலை 7 மணிக்கு பிறகு தான் மழை பெய்வது குறைந்தது. அதன் பிறகுதான் டெல்லி, ஐதராபாத், மும்பை, கொல்கத்தா, உள்ளிட்ட உள்நாட்டு விமானங்கள் ஒவ்வொன்றாக புறப்பட்டது.*

*சென்னையில் விடிய விடிய திடீரென மழை பெய்ததால் விமான பயணிகள் பலர் விமான நிலையத்தில் இருந்து வெளியே வராமல் பலமணி நேரம் காத்திருந்து அதன் பிறகே வீடுகளுக்கு புறப்பட்டுச் சென்றனர்.*

## வாரிசுகள் குறித்து ‘வாட்ஸ்அப் ‘பில் எழுப்பப்பட்டு, வலம் வரும் பொருள் செறிந்த வினா!




தமிழ் மொழியை போற்றிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள், வாரிசு அரசியலை கடுமையாக சாடினார் ***- பத்திரிகை செய்தி***

அப்படியென்றால் மேலே படத்தில் உள்ள இவர்கள் எல்லாம் யார் என்று மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா! கட்சியின் அடிமட்ட தொண்டர்களா(?) வாரிசுகளா(?) அல்லது சிபாரிசுகளா?